# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் ஆண்டின் 11 ஆம் ஞாயிறு | 14 ஜூன் 2026

**ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்**

*மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்*

மாதாந்திர நோக்கம்: **திருஅவை - ஒருங்கிணைந்து வாழ்தல்**



# இதயத்தை புனித இடமாக ஏற்றுக்கொள்தல்

தொடங்குவதற்கும், இறைவனின் தூண்டுதலுக்குப் பதிலளிப்பதற்கும் ஒரு உந்துதலை உணரும் ஒவ்வொரு நபரும் ஒரு கடினமான பணியைச் சுமந்து செல்கிறார். அந்தத் தொடக்கப்பொறி எழுகின்ற கணத்திலிருந்து, அதைத் தக்கவைத்துக்கொள்வது எளிதான ஒன்றல்ல. அமைதியான உந்துதலோடு தொடங்கி ஏற்றுக்கொள்ளப்பட்டு, பேணிக்காக்கப்பட்டு வளர அனுமதிக்கப்படும் ஒரு இடத்தைக் கண்டறியாவிட்டால், அது எளிதில் மங்கிப்போய்விடும். இது நடைபெறவேண்டுமென்றால், ஒரு சமூகத்திற்கு எப்படி செவிசாய்ப்பது, எவ்வாறு ஒருவர் இதயத்திலிருந்து பகிர்ந்துகொள்கிறார் என்பதை ஏற்றுக்கொள்ளத் தொடங்குவது அவசியம்.

இந்த நவீன உலகில் பல திசைகளில் இழுக்கப்படும்போது, இத்தகைய இதயப்பூர்வமான பகிர்வுகள், புனிதமான உரையாடல்கள், அடிக்கடி நிகழ்வதில்லை. உரையாடல்களைப் பற்றி நாம் சிந்திக்கும்போது, நாம் சொல்ல விரும்புகிறோம் என்பதைப் பற்றி அடிக்கடி சிந்திக்கிறோம். நமது கருத்துகளையும், பதில்களையும் அபிப்ராயங்களையும் தயாராக வைக்கிறோம். நாம் எவ்வாறு கேட்கப்படவேண்டும் என்பதைப் பற்றி சிந்திக்கிறோம். இருப்பினும், ஆண்டவர் நம்மை வேறுபட்ட உரையாடலுக்காக அழைக்கிறார். அது பேசுவதிலிருந்து தொடங்காமல், செவிமடுப்பதிலிருந்து தொடங்குகிறது. வெறுமனே உடனிருப்பதில் அல்ல, நமது முறைக்காக வெறுமனே காத்திருப்பது அல்ல, மாறாக செவிமடுப்பதை ஒரு புனிதமான செயலாகக் கருதுவதிலிருந்து தொடங்குகிறது.

இவ்வாறு செவிமடுப்பது, மற்றவரின் இதயத்தைப் புனிதமான ஒன்றாக ஏற்றுக்கொள்வதாகும். திருத்தந்தை பிரான்சிஸ் நமக்கு நினைவூட்டுவதுபோல, ஒவ்வொரு நபரும் “புனித பூமியாக” ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். அது கடவுள் ஏற்கெனவே செயலாற்றும் ஒரு இடம் (கிறிஸ்துஸ் விவிட் 67) அவர்கள் நம்மிடம் வரும்போது, அவர்களுடைய கேள்விகள், உள்ளத்தின் உணர்ச்சிகள், ஏன் அவர்களின் நிச்சயமில்லாத தன்மைகூட தூய ஆவியார் ஏற்கெனவே செயல்படும் இடமாக இருக்கலாம். மேலும் நாம் நமது முழு இதயத்தோடும், ஆன்மாவோடும் செவிகொடுத்துக் கேட்கும்போது, ஏதோ ஒன்று இடம் மாறுகிறது. பகிர்ந்துகொள்பவருக்கு மட்டுமல்ல; செவிகொடுத்துக் கேட்பவருக்கும் கூட ஒரு அமைதியான மனமாற்றம் ஏற்படுகிறது.

ஏனெனில் அந்தத் தருணத்தில், நாம் இனி அந்தக் கதைக்கு வெளியே இல்லை. அதை நாமும் ஒன்றாகச் சுமக்கத் தொடங்குகிறோம்.

தொடங்குவதற்கும், முன்னோக்கிச் செல்வதற்கும், புதிதாக ஒன்றைத் தொடங்குவதற்குமான அழைப்பைப் பற்றி நாம் அடிக்கடி பேசுகிறோம். ஆனால் ஏற்றுக்கொள்வதற்கும், உடன் செல்வதற்கும், ஆதரவளிப்பதற்கும் ஒரு அழைப்பு உள்ளது. ஒவ்வொரு கணமும் வெளிப்படையான வழிகளில் வழிநடத்த நாம் அனைவரும் அழைக்கப்படவில்லை. பலநேரங்களில் மற்றொருவர் தொடங்கியதை உயிர்ப்பிக்க உதவிடவும், அவருக்குப் பக்கபலமாக நிற்கவும் நாம் அழைக்கப்படும் நேரங்களும் உண்டு. இது நம்முடைய பங்கை திருஅவையின் உடலில் உள்ள நமது இடத்தைக் குறைப்பதில்லை. மாறாக அதை வெளிப்படுத்துகிறது.(எபேசியர் 4:11-12)

ஒருவேளை, செவிகொடுத்துக் கேட்கும் கலாச்சாரமாக வளர்வதன் அர்த்தம் இதுவாக இருக்கலாம். குரல்களுக்கு இடமளிப்பது மட்டுமல்ல; அவற்றுக்குள் இருக்கும் புனிதத்தன்மையை உணர்வதுமாகும். கருத்துகளைப் பகிர்ந்துகொள்வது மட்டுமல்ல, ஆவியானவர் நமக்கு மத்தியில் எவ்வாறு செயல்படுகிறார் என்பதை ஒன்றாகப் பகுத்தறிவதாகும்.

ஆகவே, நாம் நம்மையே அமைதியில் கேட்டுக்கொள்வோம். இந்த வழியில் நாம் செவிசாய்க்கத் தயாராக இருக்கிறோமா? ஒருவருக்கொருவர் உள்ள புனிதத்தன்மையை உணர்ந்துகொள்ள நாம் திறந்த மனதுடன் இருக்கிறோமா? மேலும் இறைவன் ஒருவரில் தொடங்குவதை பலர் முன்னெடுத்துச்செல்லும்படி, நம்மை நாமே அர்ப்பணிக்க நாம் தயாராராக இருக்கிறோமா?

**இன்றைய இறைவார்த்தை:**
விடுதலைப்பயணம்: 19:2-6
திருப்பாடல் 100: 2-3,5
உரோமையர் 5: 6-11
மத்தேயு 9: 36-10:8

**உங்கள் இதயத்தின் காதுகளால் செவிசாயுங்கள்**

– புனித பெனடிக்ட்

INTERNAL CIRCULATION ONLY
BUL 24/2026

**வெளியீடு**: மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலையம் (API) | **Email:** api@archkl.org